# 3 ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள முத்தான திட்டங்கள்!

**முதல் பக்கத் தொடர்ச்சி...**

மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் 24 ஆயிரத்து 158 மாற்றுத் திறனாளிகளுக்கு 5 கோடியே 55 இலட்சத்து 60 ஆயிரத்து 64 ரூபாயும், விக்கிரவாண்டியில் மாற்றுத் திறனாளிகள் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் 3ஆயிரத்து785மாற்றுத்திறனாளிகளுக்கு 1 கோடியே 38 இலட்சத்து 8 ஆயிரத்து 700 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

சமூக நலத்துறையின் சார்பில், பல்வேறுதிருமணநிதியுதவித்திட்டங்களின்கீழ் 10ஆம் வகுப்பு படித்த 1,696 ஏழைப்பெண்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம், ரூ.4.24 கோடி திருமண நிதியுதவியும், ரூ.6.10 கோடி மதிப்பிலான 13.568 கிலோ கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டுள்ளது.

பட்டம் மற்றும் பட்டயம் படித்த 2,085 ஏழைப் பெண்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ரூ.10.42 கோடி திருமண நிதியுதவியும், ரூ.7.50 கோடி மதிப்பிலான 16.680 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

**புதுமைப் பெண் திட்டத்தில் 9,488 மாணவியர் பயன்!**

புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, கல்லூரிகளில் சேர்ந்த 9 ஆயிரத்து 488 மாணவிகளும், விக்கிரவாண்டியில் 738 மாணவிகளும் மாதம் 1,000 ரூபாய் பெற்று வருகின்றனர்.

**விக்கிரவாண்டி தொகுதியில் பள்ளிக் கல்வித் துறைமூலம்**

19,589 மாணவ, மாணவியர்க்கு விலையில்லா சீருடைகள்,

10,627 மாணவ, மாணவியர்க்கு விலையில்லா காலணிகள்,

31,295 மாணவ, மாணவியர்க்கு விலையில்லா புத்தகப் பைகள்,

5,842 மாணவ, மாணவியர்க்கு விலையில்லா அட்லஸ்கள்,

3,610 மாணவியர்க்கு விலையில்லா கிரையான்கள்,

5,963 மாணவ, மாணவியர்க்கு விலையில்லா கணித உபகரணப்பெட்டிகளும்

7,017 மாணவ, மாணவியர்க்கு விலையில்லா வண்ண பென்சில்கள்,

15,140 மாணவ, மாணவியர்க்கு, விலையில்லா பூட்ஸ்கள்,

15,140 மாணவ, மாணவியர்க்கு விலையில்லா காலுறைகள் (2Socks) வழங்கப்பட்டு பயன் அடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில், 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7,600 குடும்பங்களுக்கும் விக்கிரவாண்டி தொகுதியில் 20 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 1,354 வேளாண் குடும்பங்களுக்கும் வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள வன்னியர் உட்பட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபினருக்கும் 1989இல் 20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க.

**இடஒதுக்கீட்டால் ஏராளமான பயன்!**

20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதால் 1988-1989 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 68 என்பது இந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்டபின் 1989-1990இல் 187 ஆக உயர்ந்தது.

இவர்களில் வன்னிய மாணவர்களின் எண்ணிக்கை 26 என்பது 74 ஆக ஏறத்தாழ மூன்று மடங்கு உயர்ந்தது.

இதேபோல், பொறியியல் கல்லூரியில் 1988-1989இல் 354 ஆக இருந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் சேர்க்கை 1989-1990இல் 685 ஆக உயர்ந்தது. இவர்களில் வன்னிய மாணவர்களின் எண்ணிக்கை 109 என்பது 292 ஆக ஏறத்தாழ 3 மடங்கு உயர்ந்தது.

**வன்னியர் தியாகிகள் குடும்பங்களுக்கு நிதியுதவி!**

20 சதவீத இட ஒதுக்கீடு கோரி, 1987ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினர் நடத்திய போராட்டத்தில் உயிர்நீத்த 27 பேரின் குடும்பங்களுக்கு 1998இல் தலா 3 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கியது தி.மு.க. அத்துடன், இந்த 27 சமூக நீதிப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்குக் குடும்ப ஓய்வூதியமாக மாதம் 1500 ரூபாய் அனுமதித்ததும் தி.மு.க.தான்.

அந்தக் குடும்ப ஓய்வூதியத்தை நவம்பர் 2006 முதல் மாதம் 1,500 ரூபாயிலிருந்து 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் தி.மு.க.தான். இந்த இடஒதுக்கீடு போராட்டத்தில் பங்குபெற்றவர்கள் மீது தொடுக்கப்பட்டிருந்த 12000த்திற்குமேற்பட்ட வழக்குகள் ரத்து செய்ததும் தி.மு.க.ஆட்சித்தான்.

இராமசாமி படையாச்சியார் திருவுருவச்சிலை 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய்ச் செலவில் சென்னை கிண்டியில் அமைத்து திறந்து வைக்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில்தான்.

**21 சமூக நீதிப் போராளிகள் நினைவு மண்டபம்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீடு போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூ.5 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்திட ஆணையிட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஏ.கோவிந்தசாமி நினைவரங்கம்!**

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் அமைச்சரவையில் வேளாண்துறை அமைச்சராகச் சிறப்புடன் பணியாற்றிய ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் அவருடைய திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் ஒன்றை ரூ.4 (நான்கு) கோடி மதிப்பீட்டில் அமைத்திட ஆணையிட்டு வன்னிய சமுதாயத்திற்குச் சிறப்புகள் செய்கிறார்கள்.

இப்படி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவில் தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேற்றம்கண்டுசிறந்தமாநிலமாகத்திகழ்வதுபோல், தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டத்திலும் சிறப்பான பல திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால், இம்மாவட்டம் முன்னேற்றத் திசையில் நடைபோடுகிறது. விக்கிர வாண்டி சட்டமன்றத் தொகுதியும் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.7.2024) தலைமைச் செயலகத்தில் சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் டக்காஹாஷி முனியோ (Thiru. Takahashi Muneo) அவர்கள் சந்தித்துப் பேசினார். தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் கெஞ்சிமியாடா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

கோவையிலிருந்து மதுரை வரை இயங்கும் விரைவு ரயிலை

## ராஜபாளையம் வழியாக செங்கோட்டை வரை நீட்டிப்பு செய்க!

### ஒன்றிய ரயில்வே அமைச்சரிடம் ராணி ஸ்ரீகுமார் எம்.பி. வலியுறுத்தல்!

தென்காசி.ஜூலை.9-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கோவையிலிருந்து மதுரை வரை இயங்கும் விரைவு ரயிலை ராஜபாளையம் வழியாக செங்கோட்டை வரை நீட்டிப்பு செய்ய வலியுறுத்தி கோரிக்கை மனுவை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வின் வைஸ்ணவை நேரில் சந்தித்து வழங்கினார்.



அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது.

கோயம்புத்தூரில் இருந்து மதுரை வரை இயங்கும் விரைவு ரயிலை ராஜபாளையம் வழியாக செங்கோட்டை வரை நீட்டிப்பு செய்ய வேண்டும். திருநெல்வேலி தென்காசி நெடுஞ்சாலையில் உள்ள பாவூர்சத்திரத்தில் நடைபெற்று வரும் ரயில்வே மேம்பாலம் அமைத்திடும் பணியை விரைவாக நிறைவு செய்திட வேண்டும். மேலும் கொல்லம் - சென்னை விரைவு தொடர்வண்டி தென்காசி மாவட்டம் பாம்புக் கோவில் சந்தையில் நிற்காமல் சென்று கொண்டிருக்கிறது. அதனை நின்று செல்ல உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தமது கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.

---

திருப்பத்தூரில் முன்னாள் எம்.எல்.ஏ.

## இராம.சிவராமன் 17 ஆம் ஆண்டு நினைவு நாள்!

சிவகங்கை. ஜூலை. 9.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமாக இராம.சிவராமன் இருந்தார். இவர் கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ம் தேதி மரணமடைந்தார். ஆண்டுதோறும் அவரது நினைவு நாள் தி.மு.க. சார்பில் அனுசரிக்கப்படுகிறது. நேற்று அவரது 17வது ஆண்டு நினைவுதினத்தினை முன்னிட்டு திருப்பத்தூர் மதுரை சாலையில்உள்ள பேரறிஞர் அண்ணா சிலையிலிருந்து பேரூர் கழக செயலாளர் ஆர். கார்த்திகேயன் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

**கழகத்தினர் அஞ்சலி!**

அதனைத் தொடர்ந்து இராம.சிவராமன் இல்லத்தில் அலங்கரிக்கப்பட்ட இராம.சிவராமன் திருவுருவப்படத்திற்கு திருமதிலதாசிவராமன் இராம.சிவராமன் மகன் சி.வெங்கட்ராமன், மைத்துனர் பாண்டி குமார், ஆகியோர் மலர் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் , மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பா.காளிமுத்து ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் ராம. ரவி, மணி, அபுதாகிர், சாகுல் ஹமீது ,அப்துல் அம்பலம், உதயம் சண்முகம் ,ஜிம் கண்ணன், பூக்கடை விஜயன், ஷாஜகான், ராஜா, சோம சுந்தரம், வைரமணி, நேரு, ராஜேஸ்வரி சேகர் ,சமீம் நவாஸ், சரவணன், ஏ.எம். கண்ணன் பார்த்தசாரதி , மனோகரன், வைரமணி நாகராஜன், பாஸ்கர பாண்டியன் ஸ்டீபன் ஜெயராஜ், வெள்ளைச்சாமி, சுவாமிநாதன் சேவுகன், முகமது அலி ஜின்னா, ஹலோ குமார், மதியழகன், பெரியசாமி, கோபால், சந்திரன், எம். கே.ஏம்.ரபீக், பெங்களூர் சரவணன், ராதா கிருஷ்ணன், காரைக்குடி செல்வம், சீனிவாசன், மற்றும் நிர்வாகிகள் பல்வேறு அமைப்பினர் அஞ்சலி செலுத்தினார்கள்.

---

முக்கிய பிரச்சினைகள் குறித்து உடனடி நடவடிக்கை எடுத்திடுவீர்!

## இந்திய நீதித்துறை தொடர்பான சீர்திருத்தங்கள்!

### ஒன்றிய சட்ட அமைச்சரிடம் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 9-

இந்திய நீதித்துறை தொடர்பான சீர்திருத்தங்கள் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வாலிடம் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. வலியுறுத்தினார்.



இதுகுறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

இரண்டாவது முறையாக ஒன்றிய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சராக நீங்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்காக உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், இந்திய நீதித்துறை தொடர்பான சீர்திருத்தங்கள் தேவைப்படும் முக்கிய பிரச்சினைகள் குறித்து உங்கள் கனிவான கவனத்தை கொண்டு வர விரும்புகிறேன்.

**நிரந்தர பிராந்திய அமர்வுகளை நிறுவுதல்!**

டெல்லியில் உள்ள அரசியல் சாசன அமர்வினைத் தவிர்த்து, தெற்கு, வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கு மண்டலங்களுக்காக சென்னை, டெல்லி, கொல்கத்தா, மும்பை ஆகிய இடங்களில் உச்சநீதிமன்றத்தின் நிரந்தர பிராந்திய அமர்வுகளை நிறுவுதல்.

மாநிலங்களவைக்குள் இந்தப் பிரச்சினையை நான் பலமுறை எழுப்பியுள்ளேன் மற்றும் தங்களின் முன்னோடிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளேன். மேலும், நிரந்தர பிராந்திய அமர்வுகளை நிறுவுவதற்கு வகை செய்யும் வகையில் அரசியலமைப்பின் 130 வது பிரிவில் திருத்தம் செய்வதற்கான தனி நபர் மசோதாவையும் 26.07.2021 அன்று மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தியுள்ளேன்.

நிரந்தர பிராந்திய அமர்வுகளை நிறுவுவதன் மூலம், நீதிக்கான அதிக அணுகலை உருவாக்குவதன் மூலம் நீதித்துறை நிறுவனங்களை வலுப்படுத்துவோம் மாறாக பலவீனப்படுத்த மாட்டோம். இதனால், நீதிபதிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டு, வழக்குகள் விரைந்து முடிக்கப்படு வதுடன், தேங்கிக் கிடக்கும் நிலுவைகளை விரைவாக தீர்க்க இயலும்.

அதுமட்டுமின்றி, உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். எனவே, எந்த கோணத்தில் பார்த்தாலும், நிரந்தர பிராந்திய அமர்வுகளை நிறுவுவது காலத்தின் தேவையாகும்.

**நீதிபதிகள் நியமனம்- சமூக நீதியை உறுதி செய்க!**

பிரதிநிதித்துவ நீதித்துறை இந்திய உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதி மற்றும் சமூக பன்முகத்தன்மையை உறுதி செய்தல்.

நான் உறுப்பினராக உள்ள பணியாளர், பொது மக்கள் குறைதீர்ப்பு, சட்டம் மற்றும் நீதித்துறை தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவானது, “நீதித்துறை செயல்முறைகள் மற்றும் அவற்றின் சீர்திருத்தம்” குறித்த அதன் 133 வது அறிக்கையில், நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சினைகளை எழுப்பியுள்ளது. மேலும், உயர் நீதித்துறைக்கான நியமனங்களுக்கான பரிந்துரைகளை செய்யும் போது, உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் கொலீஜியம் ஆகிய இரண்டும், பெண்கள் மற்றும் சிறுபான்மை யினர் உட்பட சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவு களைச் சேர்ந்தவர்களையும் போதுமான எண்ணிக்கையில் பரிந்துரைக்க வேண்டும் என்று கமிட்டி தன் பரிந்துரைகளை வழங்கியது. தற்போது இறுதி செய்யப்பட்டு வரும் நடைமுறை குறிப்பாணையில் இந்த விதி தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

**நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை உயர்த்துதல்!**

அரசியலமைப்பு திருத்தங்களின் மூலம் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 62லிருந்து 65ஆகவும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 65லிருந்து 70ஆகவும் உயர்த்துதல். 01.06.2024 அன்றைய நிலவரப்படி, சென்னை உயர் நீதிமன்றத்தில் 11 நீதிபதி காலியிடங்கள் உட்பட அனைத்து உயர் நீதிமன்றங்களிலும் 345 க்கும் மேற்பட்ட நீதிபதி களின் பணியிடங்கள் காலியாக உள்ளன.

இந்த நிலைமையை சீர்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளில் ஒன்று, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 62லிருந்து 65 ஆக உயர்த்துவதும், உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 65லிருந்து 70 ஆக உயர்த்துவதும் ஆகும்.

பணியாளர், பொதுமக்கள் குறைகள் மற்றும் சட்டம் மற்றும் நீதிக்கான நாடாளுமன்ற நிலைக்குழு 2018 ஆம் ஆண்டு தனது 96 வது அறிக்கையில், நீதிபதிகளின் ஓய்வு வயதை அதிகரிப்பதை ஆதரித்தது, இது தற்போதுள்ள நீதிபதிகளைத் தக்க வைத்துக் கொள்ளவும், நீதித்துறை காலியிடங்களையும் நிலுவையில் உள்ள வழக்குகளையும் குறைக்கவும் உதவும் என்று கூறியது. மேலும், 16.3.2021 அன்று இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்ட பணியாளர், பொதுமக்கள் குறைகள், சட்டம் மற்றும் நீதித்துறை தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் 107வது அறிக்கையில், உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயதை 62 லிருந்து 65 ஆக உயர்த்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை முறையே 65 மற்றும் 70 ஆக உயர்த்தவும் அவர்கள் தொடர்ந்து பரிந்துரை செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 65 ஆக உயர்த்த, அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யக் கோரி, தனி நபர் மசோதாவாக அரசியலமைப்பு திருத்த மசோதாவை 06.12.2019 அன்று மாநிலங்களவையில் நான் அறிமுகப்படுத்தியுள்ளேன்.

**கொலீஜியத்தின் பரிந்துரை புறக்கணிப்பு!**

பல்வேறு உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்த நிறுத்தி வைக்கப்பட்ட / பொருட்படுத்தப்படாத பெயர்களை நீக்குதல். உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை செய்த பிறகு அவர்களின் பெயர்களை பரிசீலிக்க எந்த காலக்கெடுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அரசியலமைப்பு நடைமுறையில், இந்த முட்டுக்கட்டையை ஒருபோதும் மன்னிக்கவோ பாராட்டவோ முடியாது, ஏனெனில் யாரும் சட்டத்தின் ஆட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல, நாம் அனைவரும் அதற்கு கட்டுப்பட்டவர்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் ஒன்றும் புதிதல்ல, பொது அரங்கில் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டு பேசபொருளாக உள்ளவையே.. இந்திய நீதித்துறையில் இத்தகைய சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலம், அமைப்பில் கசிவுகளை கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், இந்திய குடிமக்களுக்கு விரைவான நீதியை வழங்கும் நன்கு செயல்படக்கூடிய இயந்திரமாக இருப்பதை உறுதி செய்ய முடியும்.

இந்திய நீதித்துறை தொடர்பான சீர்திருத்தங்கள் தேவைப்படும் முக்கிய பிரச்சினைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. தனது கடிதத்தில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கோவை – மதுரை வரை இயங்கும் விரைவு ரயிலை ராஜபாளையம் வழியாக செங்கோட்டை வரை நீட்டிப்பு செய்ய வேண்டும், என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வின் வைஸ்ணவை நேரில் சந்தித்து வழங்கினார்.

---


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குழந்தை தமிழரசன்

ஜூலை 9 (2020)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கல்லூரி மாணவர் பேரவை தலைவராகவும், தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியதோடு, பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், தீர்மானக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1996ல் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.